**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**
<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>
**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12 ஆம் நாள் புதன்கிழமை</u>
**<u>இ.ம.எண்.02/2022 இன் அ.வ.எண்.174/2022</u>**

பத்மாவதி ... மனுதாரர் / வாதி

/ எதிர் /

ஜெகதீஸ் ... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 26.08.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.தங்கரத்தினம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.சண்முகம் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**<u>ஆணையுரை</u>**

மனு பி அட்டவணை சொத்தில் கண்ட வண்டித்தடத்தின் வழியாக மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு ஏ அட்டவணை சொத்துக்களை அடைந்து அமைதியாக அனுபவிக்கும் மனுதாரரின் வசதி உரிமையில் எதிர்மனுதாரரோ, அவரது உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யகூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனு சங்கதிகளின் சுருக்கம் :</u>**

மனு ஏ அட்டவணை சொத்து ஆனைமலை வட்டம், பெரியபோது கிராமத்தில் புல எண்.292/3ஏ அமைந்துள்ளது. மேற்படி சொத்தை கடந்த 15.07.2021ம் தேதியில் கோசலாதேவி, ஜெயராம கிருஷ்ணன், ஜெகதாம்பிகை

ஆகிய மூவரிடமிருந்து மனுதாரர் கிரையம் பெற்று, தனது பெயருக்கு மாறுதல் செய்து கொண்டு சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார். மேற்படி மனு ஏ அட்டவணை சொத்துக்களுக்குச் செல்லும் வண்டித்தடம் பி அட்டவணை சொத்தாகும்.

**2.2)** மனுதாரரின் சொத்தை ஒட்டி தென்புறத்தில் புல எண்.292/3 பி–ல் எதிர்மனுதாரரின் சொத்துக்கள் அமைந்துள்ளது. எதிர்மனுதாரரின் தகப்பனார் தங்கவேல் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்த சொத்துக்களை அவர் காலமானபின் அவரது மனைவி காளியம்மாள், மகள்கள் இந்துமதி, பூங்கோதை ஆகியவர்கள் சேர்ந்து எதிர்மனுதாரருக்கு விடுதலை செய்து கொடுத்ததன் பேரில் அவர் அனுபவித்து வருகிறார்.

**2.3)** மனுதாரரின் முன்பாத்தியதாரரான கந்தசாமி செட்டியார் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்திலும், பின்னிட்டு கந்தசாமி செட்டியார் எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்திலும் மற்றும் மனுதாரரின் முன்பாத்தியதர்கள் பாலசந்திரன் வகையறா பேர்கள் செய்து கொண்ட பாகப்பத்திரத்திலும், பொது ஷராவில் *"மேற்படி பாகங்களுக்கு ஏற்கனவே கிழமேல் மெயின் ரோட்டிலிருந்து தென்வடலாகச் செல்லும் மாமூல் வண்டிப்பாதையை இத்துடன் இணைக்கப் பட்டுள்ள வரைபடத்தில் உள்ளபடி 1,2,3 மற்றும் 4 லக்கமிட்ட பாகஸ்தர்கள் வண்டி வாகனங்கள் போகவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது. கிழமேல் ரோட்டிலிருந்து 1 இலக்கமிட்ட பாகஸ்தர் பாகச் சொத்து வரை சென்று பின்னர் 1 லக்கமிட்ட பாகஸ்தரின் சொத்திற்குள் சென்று கிழக்காகத் திரும்பி 2,3,4 இலக்கமிட்டவர்கள் அவர்களது பூமிக்கு மேற்படி 2,3,4 இலக்கமிட்டவர்களது ஆட்கள் வண்டி, வாகனாதிகள் போய் வந்து கொள்வதில் 1 இலக்கமிட்டவர் எக்காலத்திலும் ஆட்சேபணை செய்வதில்லை என்று இதன் மூலம் உறுதி கூறுகிறார்"* எனவும் குறிப்பிடப்பட்டு மேற்படி பாகப்பத்திரத்துடன் வரைபடமும் இணைக்கப்பட்டுள்ளது.

**2.4)** மேலும், மனுதாரர் கிரையம் பெற்ற பத்திரத்திலும், முன் பத்திரங்களில் உள்ள வண்டித்தட வசதி உரிமையைக் குறிப்பிடப்பட்டே கிரயம் பெற்றுள்ளார். மேலும், எதிர்மனுதாரரின் தகப்பனார் தங்கவேல் என்பவர் சின்னப்பழனி செட்டியார், மீனாட்சியம்மாள் ஆகியோரிடம் கிரயம் பெற்ற கிரயப்பத்திரத்திலும், மனுதாரர் பூமிக்கான வழித்தட உரிமை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுத்தான் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த மூன்று மாதகாலமாக எதிர்மனுதாரர், மனுதாரர் வழக்கு ஏ செட்யூல் சொத்துக்களுக்குச் செல்வதை பலவிதமாக இடையூறு செய்து தடுத்து வருகிறார். கடந்த 15.01.2022 ம் தேதியில் மனுதாரர் சொத்துக்களுக்கு வழக்கிடை பி செட்யூல் வண்டித்தடத்தில் செல்லும்போது எதிர்மனுதாரர் வழிமறித்து செல்லவிடாமல் தடுத்துள்ளார்.

**2.5)** எனவே, மனுதாரர் கடந்த 07.02.2022 அன்று எதிர்மனுதாரர் சொத்தில் உள்ள தடத்தின் அமைவிடத்தை அரசு சர்வேயர் மூலம் அளவை செய்து பத்திரத்தின்படி வண்டித்தடம் நிலுவையில் உள்ளதை உறுதி செய்து காட்டியுள்ளார். எதிர்மனுதாரர் அப்போதும் கட்டுப்படாமல் தொடர்ந்து குறுக்கீடு செய்து வந்துள்ளார். எதிர்மனுதாரரின் சட்டவிரோத செயல்பாடுகள் குறித்து காவல் துறையில் மனுதாரர் புகார் அளித்ததன் பேரில் காவல்துறையினர் எதிர்மனுதாரரை எச்சரிக்கை செய்தும், எதிர்மனுதாரர் அதனை அலட்சியப் படுத்திவிட்டார்.

**2.6)** மனுதாரர் அரசுப்பள்ளி ஆசிரியராக வேலை பார்த்து வருவதால், அவரது பணி நிமித்தம் காரணமாக தினசரி சொத்துக்களுக்குள் சென்று வர முடியாத நிலையில் உள்ளதை அவருக்கு சாதகமாக்கிக் கொண்டு எதிர்மனுதாரர் கடந்த 30.03.2022 ம் தேதியில் அவரது பூமியின் மேல் கோட்டில் தென்வடலாக மனுதாரர் சென்று அவரது சொத்துக்களுக்குள் நுழையும் பி அட்டவணை சொத்தின் தென்புறப் பகுதி அருகே கேட் வைத்தும், அதன் தெடர்ச்சியாக கம்பி வேலியும் அமைத்து உள்ளார். மனுதாரர் இதுகுறித்து

ஆட்சேபணை செய்து எதிர்மனுதாரரிடம் கேட்டபோது வாய்தகராறு செய்து வந்துள்ளார். இதனால் மனுதாரரின் விவசாயப் பொருட்களை பூமிக்கு எடுத்துச் செல்லவும், பூமியிலிருந்து எடுத்து வரவும் மிகுந்த சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே, எதிர்மனுதாரரின் மேற்படி செயலை இந்நீதிமன்ற உத்தரவினால் மட்டுமே கட்டுப்படுத்த முடியும் என்பதால் அவருக்கு எதிராக ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிருரையின் சுருக்கம்</u> :

மனு ஏ அட்டவணை சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால், மனு ஏ அட்டவணை சொத்திற்கு செல்வதற்கு மனு பி அட்டவணை வண்டித்தடத்தை அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள அவணங்களின்படி பயன்படுத்துவதாக கூறுவது பொய். மேலும், மனு பி அட்டவணை சொத்தில் உள்ள வண்டித்தடம் எதிர்மனுதாரர் பூமியை சென்றடைவதற்கும், அவரது பூமியில் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள கோவிலுக்கு சென்றடைவதற்கும், எதிர்மனுதாரரால் உருவாக்கப்பட்டது. மேலும், மனு பி அட்டவணை சொத்தான வண்டிப்பாதையை மனுச்சொத்தின் முந்தைய உரிமையாளர்கள் யாரும் பயன்படுத்தாதபோது, தற்போது கிரையம் பெற்ற மனுதாரர் மனு பி அட்டவணை சொத்தில் உரிமை கோருவது ஏற்புடையதல்ல.

**3.2)** கடந்த 28.10.1958 தேதியிட்ட கிரையப்பத்திரம் மற்றும் கடந்த 24.05.1959 தேதிய செட்டில்மெண்ட் பத்திரம் ஆகியவற்றில் வண்டித்தட உரிமைபற்றி குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவ்விதம் வண்டிப்பாதை எதுவும் ஒருபோதும் அமைக்கப்படவில்லை. மேலும், கடந்த 15.07.2020 தேதியில் உருவாக்கப்பட்ட பாகப்பத்திரமானது, கடந்த 24.05.1959 தேதிய

செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் 28.10.1958 தேதிய கிரையபத்திரத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதால், அதில் கூறப்பட்டுள்ளது போல் வண்டித்தட பாத்திய உரிமை குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர உண்மையில் அவ்வாறு எந்த வண்டித்தடபாதையும் உருவாக்கப்படவில்லை.

**3.3)** மேலும், மனுதாரரின் முன்பாத்தியதாரர்கள் பிஏபி வண்டித்தடத்தை பயன்படுத்தியும், மனு ஏ அட்டவணை சொத்திற்கு வடபுறம் அமைந்துள்ள ஓடை புறம்போக்கு வழியாகவும் மனு ஏ அட்டவணை சொத்தை அடைந்துள்ளனர். மனுதாரரும் அவ்வாறே மேற்கண்ட பிஏபி வாய்க்கால் மற்றும் ஓடை புறம்போக்கு வழியாக மனு ஏ அட்டவணை சொத்தை அடைந்து அனுபவித்து வருகிறார். மேலும், எதிர்மனுதாரர் விவசாய பணிகள் நிமிதம் தனது நிலத்தின் மேற்கு பகுதியில் ஒரு வண்டித்தடத்தை உருவாக்கியுள்ளார். மேற்படி வண்டித்தடத்தை நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். மேலும், மனு பி ஷெட்யூல் சொத்தில் அமைந்துள்ள கம்பி வேலி மனுதாரர் கூறுவது போல கடந்த 30.03.2022 தேதியில் தற்போது நிறுவப்பட்டதல்ல. அது நீண்டநாட்களுக்கு முன்னரே நிறுவப்பட்டது.

**3.4)** மேலும், எதிர்மனுதாரரின் சொத்திற்கு மேற்கு புறமாக பாலசந்திரன் என்பவரது பூமி அமைந்துள்ளதாலும், அவர் எதிர்மனுதாரரின் மாமா என்ற உறவுமுறையாலும், மேற்படி மனு பி ஷெட்யூல் வண்டித்தடத்தை அவரும் சேர்ந்து பயன்படுத்திகொள்ள எதிர்மனுதாரர் அனுமதி வழங்கியிருந்தார். அதன்பின்னிட்டு மேற்படி பாலசந்திரனுக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டவுடன் மேற்படி அனுமதி அவருக்கு மறுக்கப்பட்டு எதிர்மனுதாரரின் சொத்தின் வடபுறம் மறுபடியும் முழுவதுமாக கம்பிவேலியிட்டு அடைக்கப்பட்டது. மேலும், மேற்படி பாலசந்திரன் என்பவருக்கு மட்டுமே வண்டிதடத்தை பயன்படுத்த மனுதாரர் அனுமதி வழங்கினார். மேற்படி மனுதாரரோ, அவருக்கு மனுச்சொத்தை விற்பனை செய்தவர்களோ அல்லது

அவரது முன்பாக்கியஸ்தர்களோ பயன்படுத்தவில்லை.

**3.5)** மேலும், தாவாவோடு தாக்கல் செய்துள்ள வரைபடமானது தவறானது. மேலும், கடந்த 15.01.2022 மற்றும் 07.02.2022 ஆகிய தேதிகளில் மனுதாரர் மனு பி ஷெட்யூல் சொத்தை பயன்படுத்துவதை எதிர்மனுதாரர் இடையூறு செய்ததாக கூறுவது தவறாகும். ஏனெனில், மனுதாரர் மனு பி ஷெட்யூல் சொத்தை எந்த காலத்திலும் பயன்படுத்தவில்லை. மேலும், மனுதாரர் அவரது மனு ஏ ஷெட்யூல் சொத்திற்கு புதிய வண்டித்தடம் அமைக்க முடிவுசெய்து மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும், எதிர்மனுதாரர் மீது காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு, காவல்துறையினர் எச்சரித்து அனுப்பினார்கள் என்பது தவறு.

**3.6)** மேலும், மனுதாரர் வண்டித்தடம் 12 அடி அகலம் உள்ளதாக குறிப்பிடுவது கற்பனையானது. கடந்த 28.10.1958 கிரையப்பத்திரத்தில் வண்டி, கால்நடை, ஆள் வகையறா நடந்து கொள்ள உரிமை வழங்கப்பட்டது. அதன்படி வழித்தடமானது 5 அல்லது 6 அடி இருக்குமே தவிர அதற்கு மேல் இருக்க வாய்ப்பில்லை. எனவே, மனுதாரர் எதிர்மனுதாரரின் சொத்துகளுக்கு செல்வதை இடையூறு செய்யவும், கனரக வாகனங்கள் மூலம் மனுசொத்துக்களை சேதப்படுத்துவதற்காகவுமே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும், மனுதாரர் மனு பி ஷெட்யூல் சொத்தை பொறுத்து கோரும் உரிமை எதிர்மனுதாரர் மற்றும் மேற்படி பாலசந்தர் பூமியின் வழியாக செல்வதால் பாலசந்திரனையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. மேற்படி, இம்மனுவை அனுமதிப்பதற்கு போதிய முகாந்திரம் இல்லை. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**6)** **<u>பிரச்சினை</u>** :

மனு மற்றும் எதிருரையில் கண்டுள்ள சங்கதிகள் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் இருதரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாய்மொழி வாதங்களை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்தது. மனுதாரர்கள் தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.9** வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. நீதிமன்ற சான்றாவணமாக **நீ.ம.சா.ஆ.1** மற்றும் **நீ.ம.சா.ஆ.2** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7)** இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிருரை, ஆவணங்கள் பரிசீலனை செய்யும் போது மனுதாரர் தரப்பில் மனுதாரர் அவருக்கு பாத்தியப்பட்ட மனு ஏ ஷெட்யூல் சொத்தை அடைய மனு பி ஷெட்யூல் சொத்தான வண்டித்தடத்தை பயன்படுத்தி வண்டி, வாகனங்கள் கொண்டு செல்ல எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8)** இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்களையும், வாதங்களையும் பரிசீலனை செய்யும் போது, மனு ஏ அட்டவணை சொத்தை கடந்த 15.07.2021ம் தேதியில் கோசலாதேவி, ஜெயராம கிருஷ்ணன், ஜெகதாம்பிகை ஆகிய மூவரிடமிருந்து மனுதாரர் கிரையம் பெற்றுள்ளார் என்பது ம.சா.ஆ.4–ஐ பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது. மேலும், மனு ஏ அட்டவணை சொத்தில் மனுதாரருக்கு உள்ள உரிமையை எதிர்மனுதாரரும் மறுக்கவில்லை. மனு பி அட்டவணை சொத்தில் உள்ள வண்டித்தடம் நீண்ட காலமாக உள்ளது என்றும், தனது முன்பாத்தியதர்களுடைய ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டு அவர்கள் அனுபவித்து வந்து அதன்பிறகு மேற்படி ம.சா.ஆ.4 கிரைய ஆவணப்படி தானும் அனுபவித்து வருவதாக மனுதாரர் கூறியுள்ளார்.

**9)** ஆதியில் புல எண்.292–ல் அடங்கிய 15.89 ஏக்கர் நிலத்தில் 4 ஏக்கர் நிலத்தை மட்டும் மனுதாரரின் முன்பாத்தியதரரான கந்தசாமி செட்டியார் என்பவர் ஆறுமுகம் செட்டியார் என்பவரிடமிருந்து ம.சா.ஆ.1 கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்றுள்ளார். மேலும், மேற்படி ம.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் கந்தசாமி செட்டியார் கிரையம் பெற்ற 4 ஏக்கர் நிலத்திற்கு ஆறுமுகம் செட்டியாருக்கு சொந்தமான 1.73 ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமியின் மேல்கோட்டில் தென்வடலாக வண்டி, கால்நடை, ஆள்வகையறாக்கள் நடந்துகொள்ள தடபாத்தியம் கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

**10)** மேற்படி கந்தசாமி செட்டியார் கிரையம் பெற்ற சொத்தை தனது மகன்களான பாலசுந்தரம் என்பவருக்கும், சதாசிவம் என்பவருக்கும் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் மூலம் கொடுத்துள்ளது ம.சா.ஆ.2–ஐ பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது. ம.சா.ஆ.2 ஆவணத்திலும் மேற்படி புல எண்.292–ல் அடங்கிய 4 ஏக்கர் நிலத்திற்கு செல்லும் மேற்கண்ட வழிதடபாத்தியம் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. மேற்படி கந்தசாமி செட்டியாரின் மகன்களான பாலசுந்தரம் மற்றும் சதாசிவத்தின் வாரிசுகள் மேற்படி ம.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் பாத்திரத்தின் அடிப்படையில் அவர்களுக்கிடையே செய்துகொண்ட பாகப்பிரிவினை பத்திரத்திலும் மேற்படி தென்வடல் இட்டேரியிலிருந்து ஆறுமுகம் செட்டியாரின் நிலத்தின் மேல்கோட்டில் தென்வடலாக உள்ள வண்டி வாகனங்கள் சென்றுவருவதற்கான பாதையை பொதுவாக வைத்துக்கொண்டுள்ளது ம.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரத்தை பரிசீலனை செய்கையில் தெரிவருகிறது.

**11)** மேற்படி ம.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரத்தில் சதாசிவத்தின் வாரிசுகளுக்கு ஒதுக்கப்பட்ட பி அட்டவணை சொத்தை மனுதாரர் ம.சா.ஆ.4 கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்றுள்ளார். அவ்வாறு மனுதாரர் சதாசிவத்தின் வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தே வழக்கு ஏ

அட்டவணை சொத்தாகும். மேலும், அந்த கிரையப்பத்திரத்திலும் மேற்படி ஏ அட்டவணை சொத்திற்கு செல்வதற்கு உண்டான வண்டி, வாகனங்கள் போகவர உள்ள தடபாத்திய உரிமையையும் சேர்த்தே மனுதாரர் ம.சா.ஆ.4 கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெற்றுள்ளது தெரியவருகிறது. ஆகவே, மேற்கண்டவாறான பரிசீலனையிலிருந்து மனுதாரரின் முன்பாத்தியதர்கள் மனு பி அட்டவணை சொத்தில் கொண்ட தடபாத்திய உரிமையை பெற்று அனுபவித்து வந்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது.

**12)** மேலும், எதிர்மனுதாரரின் தகப்பனார் தங்கவேல் அவர்கள் கிரையம் பெற்ற கிரையம் பத்திரம் ம.சா.ஆ.5 ஆக மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.5 கிரையப்பத்திரத்தை பரிசீலனை செய்கையில் புல எண்.292/3-ல் கண்ட தென்வடலாக 1.73 ஏக்கர் நிலத்தை மேற்படி எதிர்மனுதாரரின் தகப்பனார் தங்கவேல் கிரையம் பெற்றுள்ளதும், மேலும் ஆறுமுக செட்டியார் கட்டியுள்ள கோவிலுக்கு சென்றுவர தடபாத்தியமும், மேற்படி நிலத்தின் மேல்கோட்டில் தென்வடலாக கந்தசாமி செட்டியார் பூமிக்கு போகவர வண்டி, ஆட்கள் நடந்துகொள்ள தடபாத்தியமும் கொடுத்து எழுதப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆகவே, எதிர்மனுதாரர் தகப்பனார் கிரையம் பெற்ற பத்திரத்திலும், மனுதாரரின் முன்பாத்தியதரரான கந்தசாமி செட்டியார் நிலத்திற்கு செல்வதற்கு தடபாத்தியம் கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில்,

" ***தாவா மனு பி அட்டவணை சொத்தாக விவரிக்கப்பட்டுள்ள வண்டித்தடமானது பெரியபோது டு கிழவன்புதூர் செல்லும் தார் ரோட்டிற்கு வடபுறத்தில் தென்வடல் நீளியாக அமைந்துள்ள எதிர்மனுவாதியின் பூமியின் மேல்கோட்டில் தென்வடலாக சுமார் 12 அடி அகலத்தில் ஒரு வண்டித்தடம் ஷை தார் ரோட்டிலிருந்து வடக்கு நோக்கி செல்கிறது. அவ்வாறான தென்வடல் வண்டித்தடம் ஷை எதிர்மனுவாதியின் பூமியை ஒட்டி***

***நேர்வடக்கே சென்று சிறிது தூரத்தில் வடகிழக்காக வளைந்து மீண்டும் எதிர்மனுவாதியின் பூமிக்குள்ளே வடக்கு நோக்கி சென்று இந்த மனுவாதியின் பூமியை ஒட்டி மேல்புறத்தில் அமைந்துள்ள ஒரு பாலசந்தர் என்கின்ற மூன்றாம் நபர் பூமியின் தென்புற பகுதியினை அடைந்து அதிலிருந்து நேர் வடக்கே செல்கிறது. மேலும் மேற்படி வண்டித்தடமானது மனுவாதியின் பூமியை ஒட்டியுள்ள மூன்றாம் நபர் பாலசந்தர் பூமிக்குள் மட்டும் வடக்கு நோக்கி செல்கிறது. மனுதாரர் பூமிக்குள் வண்டித்தடம் செல்லவில்லை.***" என்று குறிப்பிட்டுள்ளார்.

**13)** ஆனால், எதிர்மனுதாரர் மேற்படி வண்டித்தடம் தற்போது தனது தேவைக்காக தான் உருவாக்கியதாகவும், எதிர்மனுதாரரின் சொத்திற்கு மேற்கு புறமாக தனது மாமா பாலசந்திரன் என்பவரது பூமி அமைந்துள்ளதாலும், மேற்படி மனு பி ஷெட்யூல் வண்டித்தடத்தை அவரும் சேர்ந்து பயன்படுத்திகொள்ள எதிர்மனுதாரர் அனுமதி வழங்கியிருந்தார் என்றும், அதன்பின்னிட்டு மேற்படி பாலசந்திரனுக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டவுடன் மேற்படி அனுமதி அவருக்கு மறுக்கப்பட்டு எதிர்மனுதாரரின் சொத்தின் வடபுறம் மறுபடியும் முழுவதுமாக கம்பிவேலியிட்டு அடைக்கப்பட்டது என்றும், மேலும், பாலசந்திரன் என்பவருக்கு மட்டுமே மேற்படி பாதையை பயன்படுத்த மனுதாரர் அனுமதி வழங்கினார் என்றும், மேற்படி மனுதாரரோ, அவருக்கு மனுச்சொத்தை விற்பனை செய்தவர்களோ அல்லது அவரது முன்பாக்கியஸ்தர்களோ பயன்படுத்தவில்லை என்றும், மேலும் வழக்கு பி அட்டவணை சொத்தில் கண்ட வண்டிதடம் மனுதாரர் கூறுவது போல் 12 அடி அகலத்தில் செல்லவில்லை என்றும், 5 அல்லது 6 அடி அகலத்தில் தான் உள்ளது என கூறியுள்ளார்.

**14)** ஏற்கனவேகண்டவாறான பரிசீலனையிலிருந்து, 1958–ம் வருடம் கிரையம் பெற்ற கந்தசாமி செட்டியாரின் கிரையப்பத்திலும், அதன்பின்னிட்டு

மனுதாரரின் முன்பாத்தியதர்களின் ஆவணங்களிலும், மேற்கண்ட வழக்கு பி அட்டவணை சொத்தான வண்டிப்பாதை பற்றி குறிப்பிடப்பட்டும், அதுமட்டுமின்றி எதிர்மனுதாரரின் தகப்பனாரின் கிரையப்பத்திலும் வழக்கு பி அட்டவணை வண்டித்தடம் பற்றி குறிப்பிடப்பட்டு அவர்கள் அனுபவித்து வந்துள்ளார்கள் என்ற சங்கதி தெரியவந்துள்ளது. மேலும், எதிர்மனுதாரரின் மாமா பாலசந்திரனும், பாலசந்திரனின் சகோதரர் சதாசிவத்தின் வாரிசுகளும் சேர்ந்து செய்துகொண்ட பாகப்பத்திரம் ம.சா.ஆ.3–ல்,

" ***கிழமேல் ரோட்டிலிருந்து 1 இலக்கமிட்ட பாகஸ்தர் பாகச் சொத்து வரை சென்று பின்னர் 1 லக்கமிட்ட பாகஸ்தரின் சொத்திற்குள் சென்று கிழக்காகத் திரும்பி 2,3,4 இலக்கமிட்டவர்கள் அவர்களது பூமிக்கு மேற்படி 2,3,4 இலக்கமிட்டவர்களது ஆட்கள் வண்டி, வாகனாதிகள் போய் வந்து கொள்வதில் 1 இலக்கமிட்டவர் எக்காலத்திலும் ஆட்சேபணை செய்வ–தில்லை என்று இதன் மூலம் உறுதி கூறுகிறார்*** " என குறிப்பிடப்பட்டுள்ளது.

**15)** ஆகவே, வழக்கு பி அட்டவணை சொத்தில் கண்ட வண்டித்தடத்தின் வழியாக வந்து மேற்படி பாலசந்திரன் நிலத்திற்குள் சென்று சதாசிவத்தின் வாரிசுகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பி அட்டவணை சொத்தை அடைய வேண்டுமென்று தடபாத்தியம் கொடுத்து ம.சா.ஆ.3 பாகபத்திரம் எழுதப்பட்டுள்ளது. மேற்படி சதாசிவத்தின் வாரிசுகளிடமிருந்து மேற்கண்டவாறான தடபாத்தியம் உட்பட மனு ஏ அட்டவணை சொத்தை ம.சா.ஆ.4 கிரையப்பத்திரம் மூலம் மனுதாரர் கிரையம் பெற்றுள்ளார். நீதிமன்ற ஆணையரும் தனது அறிக்கையில் மனுதாரரின் பூமியை அடைவதற்கு வேறு எந்ததடமும் தென்படவில்லை என்று கூறியுள்ளார். இந்நிலையில் மேற்படி பி அட்டவணை சொத்தில் கண்ட வண்டித்தடத்தை தனது தேவைக்காக எதிர்மனுதாரர் ஏற்படுத்தியதாகவும், பாலசந்திரன் தனது மாமா என்பதால் அவர் மட்டும் மேற்படி பி அட்டவணை சொத்தில் கண்ட வண்டித்தடத்தை பயன்படுத்த

அனுமதித்தாகவும் மனுதாரர் கூறுவது ஏற்புடையதாக இல்லை. எனினும், மனு பி அட்டவணை சொத்தில் கண்ட வண்டித்தடம் 12 அடி அகலம் உள்ளதாக மனுதாரர் கூறுவது குறித்து எவ்வித ஆவணங்களும் அவரது தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், வழக்கறிஞர் அணையர் அறிக்கையிலும், வழக்கு பி அட்டவணை வண்டித்தடத்தின் அகலம் பற்றி குறிப்பிடப்படவில்லை.

**16)** மேற்கண்டவாரான பரிசீலனையிலிருந்து மனு பி அட்டவணை சொத்தில் செல்லும் வண்டிப்பாதையை பயன்படுத்தி மனுதாரர் மனு ஏ அட்டவணை சொத்திற்கு சென்று வருவதற்கும், வண்டி வாகனங்கள் கொண்டு செல்வதற்கும் எதிர்மனுதாரரோ அவர்களை சார்ந்த நபர்களோ எந்தவிதத்திலும் தடையை ஏற்படுத்தவோ, தடுக்கவோ, இடையூறு செய்யவோ கூடாது என்பதை பொறுத்து மனுவினை அனுமதிப்பதற்கு போதிய முகாந்திரமும், சமநிலை சமவாய்ப்பும் உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17)** முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு மனு பி அட்டவணை சொத்தில் கண்ட அமைப்பால் உள்ளவாறான வண்டித்தடத்தின் வழியாக மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு ஏ அட்டவணை சொத்துக்களை அடைந்து அமைதியாக அனுபவிக்கும் மனுதாரரின் வசதி உரிமையில் எதிர்மனுதாரரோ, அவரது உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யகூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை 2022 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12 ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2022.10.12 19:40:49 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர் தரப்பு சாட்சி:**

–இல்லை–

**மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 28.10.1958 | ஆறுமுகம் செட்டியார் கந்தசாமி செட்டியாருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் நகல் |
| ம.சா.ஆ.2 | 24.05.1959 | கந்தசாமி செட்டியார் பாலச்சந்திரன், சதாசிவம் ஆகியோருக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சார்பதிவக நகல் |
| ம.சா.ஆ.3 | 15.07.2020 | பாலச்சந்திரன், கோசலாதேவி, ஜெயராமகிருஷ்ணன், ஜெகதாம்பிகை ஆகியோர் செய்து கொண்ட பாகப்பத்திரத்தின் சார்பதிவக நகல் |
| ம.சா.ஆ.4 | 15.07.2021 | கோசலாதேவி, ஜெயராமகிருஷ்ணன், ஜெகதாம்பிகை ஆகியோர் பத்மாவதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரத்தின் சார்பதிவக நகல் |
| ம.சா.ஆ.5 | 13.10.1969 | தங்கவேல் என்பவருக்கு சின்னப்பழனி செட்டியார் மற்றும் மீனாட்சியம்மாள் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சார்பதிவக நகல் |
| ம.சா.ஆ.6 | 02.12.2021 | எதிர்மனுதாரருக்கு அவரது குடும்பத்தார் எழுதிக்கொடுத்த பாகபாத்தியதை விடுதலைப் பத்திரத்தின் சார்பதிவக நகல் |
| ம.சா.ஆ.7 | | ஆனைமலை வட்ட சார் ஆய்வாளர் கொடுத்த சர்வே அறிவிப்பு நகல் |
| ம.சா.ஆ.8 | 08.04.2022 | பெரியபோது கிராமம் பட்டா எண் 714 க்கான கணினி சிட்டா |
| ம.சா.ஆ.9 | | வழக்கிடை பி ஷெட்யூல் சொத்துக்களை காட்டும் புகைப்படங்கள் (எண்ணிக்கை 4) |

**எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

– இல்லை –

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்:</u>**

| | |
|---|---|
| நீ.மா.சா.ஆ.1 மற்றும் நீ.மா.சா.ஆ.2 | நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் |

N BHARATHIRAJAN

Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2022.10.12 19:40:33 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.